## முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி.
## MCOP. No.171/2023

எ.ம.சா.1 தேதி. 08.04.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கவிச்சக்கரவர்த்தி | த/பெ, | நடராஜன் |
| வயது | 38 | தொழில் | Senior Manager. TATA AIG General Insurance Company. Teni District. |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு **முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பில் ஆவணங்களாக 05.02.2026 அன்று எங்கள் வழக்கறிஞர் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகவும், 09.02.2026 அன்று மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **எ.ம.சா.ஆ.**2 ஆகவும், 05.02.2026 அன்று எங்கள் வழக்கறிஞர் மூலம் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.**3 ஆகவும், 09.02.2026 அன்று மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **எ.ம.சா.ஆ 4** ஆகவும், 1ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல் கணினி வழி பதிவிறக்கம் **எ.ம.சா.ஆ.5** ஆகவும், மனுதாரர் ஓட்டிச்சென்ற TN 82 Y 6991 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் நகல் **எ.ம.சா.ஆ.6** ஆகவும் மேற்படி வழக்கினை தள்ளுபடி செய்யும்படி பிராத்திக்கப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 21.05.2023 மதியம் 12.30 மணிக்கு விபத்து நடந்தது உண்மையா என்றால் உண்மை. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 V 8170 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக நான் நேரில் ஆய்வு செய்யவில்லை. விசாரணை அதிகாரியை வைத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 V 8170 என்ற இருசக்கர வாகனம் விபத்து சமயத்தில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து

சமயத்தில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளதால் விபத்துக்கான நஷ்ட ஈடு எங்கள் நிறுவனம் தான் வழங்க வேண்டும் என்றால் பாலிசி விதிமீறல் உள்ளதால் நாங்கள் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுனர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.